கர்த்தர் நல்லவர்

The Lord is Good

Album 26 Song 4 | ஆல்பம் 26 பாடல் 4




GLORY
KING OF KINGS
Fri
DATE 04 05 2007
கர்த்தர் நல்லவர்
106 சங்கீதம்
கர்த்தர் நல்லவர்
அவரைத் துதியுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
கர்த்தர் வல்லவர்
அவரைப் போற்றுங்கள்
அவர் கிருபை என்றுமுள்ளது
சிவந்த சமுத்திரத்தை அதட்டி - அதை
வற்றிப் போகச் செய்தவரே
வெட்டாந்தரையில் நடப்பதுபோல - பிதாக்களை
ஆழங்களில் நடக்கச் செய்தீரே
பகைஞனின் கைக்கு விலக்கி - பிதாக்களின்
சத்துருவின் கைக்கு விலக்கி மீட்டீரே
செங்கடலால் எதிரிகளை மூடிக்கொண்டு
ஒருவரையும் உயிரோடே வைக்கவில்லை
சீக்கிரமாய் உமது கிரியைகளை - மறந்து
உமது ஆலோசனைக்கு காத்திராமல்
வனாந்தரத்திலே இச்சையுள்ளவர்களாகி - உம்மை
அவாந்தர வெளியிலே பரீட்சை பார்த்தார்கள்
பிதாக்கள் கேட்டதைக் கொடுத்தீர் - அவர்கள்
ஆத்துமாக்களில் இளைப்பை அனுப்பினீர்
பகலிலே மேகஸ்தம்பமாகவும்
இரவிலே அக்கினியால் வழிகாட்டினீர்
பிதாக்கள் பொறாமை பட்டனர்
மோசே ஆரோனின் மேலே
HALLELUJAH

பூமி பிளந்து தாத்தானை விழுங்கி
அபிராமின் கூட்டத்தை மூடிப்போட்டது
பாவம் செய்த ஜனங்களின் கூட்டத்தில்
அக்கினி பற்றி எரிந்து
அக்கினி ஜுவாலையால் துன்மார்க்கரை
எரிச்சல் அடைந்து எரித்துப்போட்டதே

ஓரேபிலே ஒரு கன்றுக்குட்டியை - உண்டாக்கி
வார்ப்பித்த விக்கிரகத்தை நமஸ்கரித்தார்கள்
தங்கள் மகிமையை புல்லைத் தின்கிற
மாட்டின் சாயலாக மாற்றினார்கள்
இரட்சிப்பின் தேவனை மறந்துபோனார்கள்
திறப்பின் வாசலில் நின்றான் - மோசே
கர்த்தரின் உக்கிரத்தை ஆற்றினான்
உமது சத்தத்திற்கு செவிகொடா ஜனங்களுக்கு
விரோதமாய் உமது கையை எடுத்தீர்

பாகால் பேயோரை சேவித்து
சவங்களின் பலிகளைப் புசித்தனர்
தங்கள் கிரியைகளினால் கோபம் மூட்டினர்
கர்த்தருக்கு எதிராய் முறுமுறுத்தனர்
கர்த்தர் வாதைகளை அனுப்பினார்
ஜனங்கள் நோய்களினால் மடிந்தனர்
பினெகாஸ் எழுந்துநின்று நியாயஞ்செய்தான்
அதினால் வாதைகளை நிறுத்தினீர்



DATE

பல தெய்வங்களோடு பிதாக்கள் கலந்து
விக்கிரகங்களை சேவித்து வாழ்ந்தனர்
அவைகள் அவர்களுக்கு கண்ணியாயிற்று
பிசாசுக்கு பிள்ளைகளை பலியிட்டனர்
குற்றமில்லாத இரத்தத்தை சிந்தினார்கள்
தேசம் இரத்தத்தால் தீட்டுப்பட்டது
கர்த்தரின் கோபம் ஜனத்தின்மேல் மூண்டது
உமது சுதந்தரத்தை அருவருத்தீர்

புற ஜாதிகளின் கையிலே ஒப்புக்கொடுத்தீர்
பகைவர்கள் பிதாக்களை ஆள அனுமதித்தீர்
அநேகந்தரம் பிதாக்களை விடுவித்தீர்
தங்களுடைய அக்கிரமத்தினால் சிறுமைப்பட்டனர்
பிதாக்களின் கூப்பிடுதலை கேட்ட போது
அவர்களின் இடுக்கத்தை நீர் கண்ணோக்கினீர்
உமது உடன்படிக்கையை நினைத்து
உமது கிருபையின்படி மனமிரங்கினீர்

நியாயத்தைக் கைக்கொள்ளும் மனிதா
நீதிசெய்யும் நீயே பாக்கியவான்
கர்த்தர் தெரிந்துகொண்டவரின்
நன்மையை நான் கண்டு மகிழ்கிறேன்
எங்கள் பிதாக்களோடுகூட
நாங்களும் சேர்ந்து பாவம் செய்தோம்
நீர் தரும் கிருபையின் படியே - எங்களை
உம் இரட்சிப்பினால் சந்தித்தருளும்


GLORY
KING OF KINGS
DATE
உமது பரிசுத்த நாமத்தைப் போற்றி
உம்மை துதிக்கிறதில் மேன்மை பாராட்டுவோம்
எங்களை இரட்சியும் இயேசு கிறிஸ்துவே
எங்களை ஜாதிகளிலிருந்து சேர்த்தருளும்
HALLELUJAH


אעוסיה גמעובלה אסד
חסד